Dhinamani
24-04-24
Pg-11

# சிறுவர்களை கோபக்காரர்களாக்கும் கைக்கணினிகள்

டொரன்டோ, செப். 23: கைக்கணினிகளை (டேப்ளட்) அதீதமாகப் பயன்படுத்தும் சிறுவர்கள் அதிக கோபக்காரர்களாக இருப்பதாக கனடாவில் மேற்கொள்ளப்பட்ட ஓர் ஆய்வில் தெரியவந்துள்ளது.

இது குறித்து ஆய்வாளர்கள் கூறியதாவது:

சிறுவர்களுக்கு சொந்தமாக கைக்கணிகளை வாங்கித் தரும் வழக்கம் நாளுக்கு நாள் அதிகரித்துவருகிறது. கடந்த 2013-ஆம் ஆண்டு வெறும் ஏழு சதவீதமாக இருந்த கைக்கணினிகளை சொந்தமாக வைத்திருக்கும் சிறுவர்களின் எண்ணிக்கை 2020-இல் 44 சதவீதமாக அதிகரித்துள்ளது.

அமெரிக்காவில் 93 சதவீத பெற்றோர் தங்களின் 2 முதல் 4 வயதுக்குள்பட்ட குழந்தைகள் மொபைல் சாதனங்கள் பயன்படுத்துவதை ஊக்குவிக்கின்றனர்.

கைக்கணினிகளும் பிற மொபைல் சாதனங்களும் இணயதளத்தின் உதவியுடன் பயன்படுத்தப்படுகின்றன. அந்த இணையதளத்தின் மூலம், பயன்பாட்டாளரின் விருப்பங்களுக்கு மிகவும் உகந்த அம்சங்கள் கிடைப்பதால் சிறுவர்கள் அவற்றின் மீது அளவுக்கு அதிகமான ஆர்வம் கொள்கின்றனர்.



இருந்தாலும், திறன்களை வளர்த்துக் கொள்வது, கோபம் போன்ற உணர்வுகளைக் கட்டுப்படுத்துவது உள்ளிட்டவற்றைக் கற்றுக் கொள்வதற்கான மிகக் குறைந்த வாய்ப்புகளையே இந்த சாதனங்கள் அளிக்கின்றன.

எனவே, கோப உணர்ச்சிகளைக் கட்டுக்குள் வைத்திருக்கும் சுபாவம் ஒரு குழந்தைக்கு சுமார் 2 வயதிலிருந்துதான் உருவாக்கப்படவேண்டும். ஆனால் அந்த வயதிலிருந்தே கைக்கணினிகளில் பெரும்பாலான நேரத்தை சிறுவர்கள் செலவிடுவதால் அவர்கள் கோபத்தை அடக்க முடியாமல் கூச்சலிடும் சுபாவம் கொண்டவர்களாக உருவெடுப்பதற்கு அதிக வாய்ப்புகள் உள்ளன.

இது தொடர்பாக 3.5, 4.5 மற்றும் 5.5 வயது கொண்ட 315 சிறுவர்களிடம் நாங்கள் ஆய்வு மேற்கொண்டோம். அந்த ஆய்வில், சிறுவர்கள் எவ்வளவு நேரத்தை கைக்கணிகளுடன் செலவிடுகிறார்கள் என்ற விவரத்தை சேகரித்தோம்.

அதில், 3.5 வயது கொண்ட சிறுவர்கள் கைக்கணினியைப் பயன்படுத்த அதிகரிக்கும் ஒவ்வொரு 73 நிமிஷத்துக்கும் அவர்களின் கோபத்தில் கூச்சலிடும் தன்மை கணிசமாக அதிகரிப்பது தெரியவந்தது.

அதே போல், 5.5 வயது கொண்ட சிறுவர்களின் கைக்கணினி பயன்பாடு 17 நிமிஷம் அதிகரித்தாலே அவர்களின் கோபம் அதிகரிப்பது ஆய்வில் தெரியவந்தது என்று ஆய்வாளர்கள் கூறினர்.